**சுருக்கம்**

வேளாண்மை-உழவர் நலத் துறை – அறிவிப்புகள் 2021-22 – நிலமில்லாத 4,077 விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ.3.46 கோடி செலவில் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் தோட்டக்கலைத் தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**வேளாண்மை–உழவர் நலத் (தோ.க1–1) துறை**

**அரசாணை (நிலை) எண்.196** **நாள் 18.11.2021**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**
**பிலவ வருடம், கார்த்திகை 2**

**படிக்கப்பட்டது:**

இயக்குநர், தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை கடித எண். பயிற்சி/ 15563/2021, நாள் 02.09.2021.

------

**ஆணை:**

28.8.2021 வேளாண்மை-உழவர் நலத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் வேளாண்மை-உழவர் நலத்துறை அவர்கள் பிறவற்றுடன் பின்வரும் அறிவிப்பினை மேற்கொண்டுள்ளார்கள்:–

**"நிலமில்லா விவசாயத் தொழிலாளர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கும் வகையில், 2021–2022–ஆம் ஆண்டில் 1,077 நபர்களுக்கு ஆறு மாத கால உறைவிட தோட்டத் தொழில்நுட்பவியலாளர் பயிற்சி ரூ.1.77 கோடி நிதியிலும், 3,000 நபர்களுக்கு, பூங்கொத்து, பூ அலங்காரம் செய்தல், நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவுதல் மற்றும் பராமரித்தல், தேனீ வளர்ப்பு குறித்த 30 நாள் பயிற்சிகள் ரூ.1.69 கோடி நிதியிலும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் வழங்கப்படும். இப்பயிற்சியில் பெண் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்".**

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும்பொருட்டு பார்வையில் காணும் கடிதத்தில் இயக்குநர், தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை அவர்கள் நிலமில்லா விவசாயத் தொழிலாளர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கும் வகையில் (1) பூங்கொத்து மற்றும் பூ அலங்காரம் செய்தல், (2) நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவுதல் மற்றும் பராமரிப்பு செய்தல், (3) தேனீ வளர்ப்பு தொழில்நுட்பம் ஆகிய பொருட்களில் பயிற்சிகள் 30 நாட்களுக்கு அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் 3,000 நபர்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள். மேலும், பயிற்சியில் கலந்து கொள்ளும் நபர்களுக்கு போக்குவரத்து கட்டணமாக நாள் ஒன்றுக்கு ரூ.100/– வீதம் வழங்கப்படும் என்றும், இதற்கு குறுகிய கால திறன்மேம்பாட்டு பயிற்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ரூ.1.69 கோடி பயன்படுத்தப்படும் என்றும், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ்

ஒதுக்கீட்டில் உள்ள ரூ.1.77 கோடி நிதியில் 1,077 நபர்களுக்கு உறைவிட தோட்ட தொழில்நுட்பவியலாளர் பயிற்சி வழங்கப்படுவதோடு இப்பயிற்சியில் பெண் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் தெரிவித்துக் கொண்டுள்ளார்கள்.

3. தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்கள் தோட்டக்கலைப் பண்ணைகளில் தோட்டக்கலை தொழில்நுட்ப பயிற்சி அளித்திட அனுமதியும், அதற்கென குறுகிய கால திறன் மேம்பாட்டு பயிற்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ரூ.1.69 கோடி மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ரூ.1.77 கோடி ஆகியவற்றினை பயன்படுத்திட அனுமதியும் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

4. இயக்குநர், தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை ரூ.3.46 கோடி செலவில் குறுகிய கால திறன் மேம்பாட்டு பயிற்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.69 கோடி மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.77 கோடி ஆகிய நிதியினை பயன்படுத்தி பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்படுத்த அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

(அ) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் குறுகிய கால திறன் மேம்பாட்டு பயிற்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.69 கோடியானது தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் விதிகளுக்கு உட்பட்டு செலவிடப்பட வேண்டும்.

(ஆ) தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.77 கோடி நிதி, தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.

(இ) பயிற்சிக்குப் பின்னர், தொழில் முனைவோர்களாக உருவான விவசாயத் தொழிலாளர்கள் குறித்த விரிவான அறிக்கையினை பயிற்சி முடிந்த ஒரு வருட காலத்திற்குள் அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக நிதியினை தேவைப்பட்டால் மாநில பங்காக எடுக்கலாம்.

5. இயக்குநர், தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை அவர்கள் இவ்வரசாணையின் இணைப்பில் உள்ளவாறு மாவட்டவாரியான பயிற்சியினை அளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை, அரசாணை (நிலை) எண். 519, நிதி (சம்பளங்கள்) துறை, நாள் 29.9.1997 பத்தி 13 (vi)-ல் வழங்கப்பட்ட ஒப்புதலின்படி வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்.**

பெறுநர்
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, சென்னை-5
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, சென்னை-5.

முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை-18
முதன்மை மாநில கணக்காயர் (E&RSA), சென்னை-18
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை-18
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை -9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-600 008.

நகல்
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் (ம) அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை-உழவர் நலத் துறை, சென்னை-9.
நிதித்(வேளாண்-உந) துறை, சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (அநமு3/வசெமதி/தோ.க2) துறை, சென்னை-9
உதவி நிரலர், வேளாண்மை-உழவர் நலத் துறை, சென்னை-9
சம்பந்தப்பட்ட கோப்பு எண்.18835/தோ.க.1-1/2021
இருப்புக் கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

18.11.21
பிரிவு அலுவலர்

18.11.21

## இணைப்பு

[அரசாணை (நிலை) எண்.196, வேளாண்மை–உழவர் நலத் (தோ.க1–1) துறை, நாள் 18.11.2021]

மாவட்ட வாரியான பயிற்சி விவரம் பின்வருமாறு:–

| வ. எண். | மாவட்டம் | குறுகிய கால தொழில் நுட்பபயிற்சி (30 நாட்கள்) | | உறைவிட தோட்ட தொழில்நுட்ப வியலாளர் பயிற்சி | | ஆக மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | விவசாயிகளின்எண்ணிக்கை | நிதி (இலட்சத்தில்) | விவசாயிகளின்எண்ணிக்கை | நிதி (இலட்சத்தில்) | விவசாயிகளின்எண்ணிக்கை | நிதி (இலட்சத்தில்) |
| 1 | கடலூர் | 160 | 9.01 | 49 | 8.046 | 209 | 17.06 |
| 2 | கிருணஷ்கிரி | 160 | 9.01 | 49 | 8.046 | 209 | 17.06 |
| 3 | திண்டுக்கல் | 120 | 6.76 | 87 | 14.50 | 207 | 21.26 |
| 4 | கோயம்புத்தூர் | 160 | 9.01 | 30 | 4.926 | 190 | 13.94 |
| 5 | நீலகிரி | 120 | 6.76 | 69 | 11.33 | 189 | 18.09 |
| 6 | மதுரை | 120 | 6.76 | 54 | 8.867 | 174 | 15.63 |
| 7 | தருமபுரி | 120 | 6.76 | 49 | 8.046 | 169 | 14.81 |
| 8 | சேலம் | 120 | 6.76 | 49 | 8.046 | 169 | 14.81 |
| 9 | தேனி | 120 | 6.76 | 49 | 8.046 | 169 | 14.81 |
| 10 | திருச்சி | 120 | 6.76 | 20 | 3.248 | 140 | 10.01 |
| 11 | கன்னியாகுமரி | 80 | 4.51 | 54 | 8.867 | 134 | 13.37 |
| 12 | புதுக்கோட்டை | 80 | 4.51 | 49 | 8.046 | 129 | 12.55 |
| 13 | சிவகங்கை | 80 | 4.51 | 49 | 8.046 | 129 | 12.55 |
| 14 | தஞ்சாவூர் | 80 | 4.51 | 49 | 8.046 | 129 | 12.55 |
| 15 | திருநெல்வேலி | 80 | 4.51 | 49 | 8.046 | 129 | 12.55 |
| 16 | வேலூர் | 80 | 4.51 | 49 | 8.046 | 129 | 12.55 |
| 17 | விழுப்புரம் | 80 | 4.51 | 49 | 8.046 | 129 | 12.55 |
| 18 | பெரம்பலூர் | 80 | 4.51 | 48 | 7.882 | 128 | 12.39 |
| 19 | ஈரோடு | 80 | 4.51 | 30 | 4.926 | 110 | 9.43 |
| 20 | ராமநாதபுரம் | 40 | 2.25 | 49 | 8.046 | 89 | 10.3 |
| 21 | திருப்பூர் | 40 | 2.25 | 49 | 8.046 | 89 | 10.3 |
| 22 | அரியலூர் | 40 | 2.25 | 48 | 7.882 | 88 | 10.14 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 23 | கரூர் | 80 | 4.51 | 0 | 0 | 80 | 4.51 |
| 24 | மயிலாடுதுறை (ம) நாகப்பட்டினம் | 80 | 4.51 | 0 | 0 | 80 | 4.51 |
| 25 | நாமக்கல் | 80 | 4.51 | 0 | 0 | 80 | 4.51 |
| 26 | தென்காசி | 80 | 4.51 | 0 | 0 | 80 | 4.51 |
| 27 | திருப்பத்தூர் | 80 | 4.51 | 0 | 0 | 80 | 4.51 |
| 28 | தூத்துக்குடி | 80 | 4.51 | 0 | 0 | 80 | 4.51 |
| 29 | விருதுநகர் | 80 | 4.51 | 0 | 0 | 80 | 4.51 |
| 30 | செங்கல்பட்டு | 40 | 2.25 | 0 | 0 | 40 | 2.25 |
| 31 | கள்ளக்குறிச்சி | 40 | 2.25 | 0 | 0 | 40 | 2.25 |
| 32 | காஞ்சிபுரம் | 40 | 2.25 | 0 | 0 | 40 | 2.25 |
| 33 | ராணிபேட்டை | 40 | 2.25 | 0 | 0 | 40 | 2.25 |
| 34 | திருவண்ணாமலை | 40 | 2.25 | 0 | 0 | 40 | 2.25 |
| 35 | திருவள்ளூர் | 40 | 2.25 | 0 | 0 | 40 | 2.25 |
| 36 | திருவாரூர் | 40 | 2.25 | 0 | 0 | 40 | 2.25 |
| | மொத்தம் | 3000 | 169.00 | 1077 | 177.00 | 4077 | 346.00 |

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

18.11.21

பிரிவு அலுவலர்

18.11.21